6. அறிவிப்புகள்.

தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்து இருக்கிறார்கள்.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கிறது.

(முற்பகல் 10-30)

(இ) 1975 ஆம் ஆண்டு, இந்தியத் துறைமுகங்கள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/75)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, ''1975 ஆம் ஆண்டு, இந்தியத் துறைமுகங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1975) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்'' என முன்மொழிகிறேன்.

---

* 5-3-1975-ம் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS